1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தனியார் பள்ளியில் இருக்கக் கூடிய என்டோமெண்ட் முழுவதையும் தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனில் போட வேண்டும் என்று நிச்சயமாக நிர்ப்பந்திக்கப்பட்டு தனியார் பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படி ஏதாவது கட்டாயப் படுத்தும் சுற்றறிக்கை இருக்குமேயானால், அதை வலியுறுத்தாதபடி எது அந்தப் பள்ளிகளுக்குச் சாதகமோ அந்த வங்கியில் போடலாம் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஆணையில் "நாஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட்ஸ்", நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்ஸ், தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்—இந்த மூன்றில், ஒன்றில் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே மட்டும் போட வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

Grade II Tamil Pandits

*242 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Grade II Tamil Pandits serving in the High Schools in the Dindigul Municipality who are qualified for Grade I salary;

(*b*) whether they have all been granted their Grade I salaries sanctioned to them by the Government; and

(*c*) if not, the reasons therefor?

இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணி யாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் எத்தனை பேர் முதல்

[1972 ஆகஸ்ட் 24

நிலே பதவிக்கான சம்பளத்தைப் பெறத் தகுதியுள்ளவர்களாக உள்ளனர்?

(இ) அவர்களுக்கு அரசிஞல் ஒப்பளிக்கப்பட்டுள்ள முதல் நிலே சம்பளம் அவர்கள் அனேவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(உ) இல்லேயெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) நான்கு

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லே.

Administrative Staff College, Hyderabad

* 243 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI**): Will the **Hon.** the **Minister for Education and Local** Administration be pleased to state—

(*a*) whether the Administrative Staff College, Hyderabad has submitted any report about the management of the Directorate of Education in this State in 1972; and

(*b*) if so, whether a copy of the report will be pleased on the table of the House?

ஹைதராபாத் நிர்வாகப் பணியாளர் கல்லூரி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹைதராபாத், நிர்வாகப் பணியாளர் கல்லூரி இம் மாநிலத்தில் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் நிர்வாகம் பற்றி அறிக்கை எதனேயும் 1972-ல் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அந்த அறிக்கையின் படி ஒன்று மேலவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இவ்வறிக்கை மாநில அரசின் திட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மந்தன அறிக்கை ஆகும். திட்டக் குழுவைச் சார்ந்த கல்விப் பணிக் குழுவே அவ்வறிக்கையை நிராகரித்துவிட்டது. எனவே அவ் வறிக்கையை அரசு மட்டத்தில் மேலும் கருதிப் பார்க்கும் நிலே எழாது.